## 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதிக்கான உடபலாத்த பிரதேச சபையின் பொதுக்கூட்ட அறிக்கை

**நேரம் - மு.ப 10.00**
**வருகை**

| | |
|---|---|
| 01. திரு.D.G.குணசேண | கௌரவ. தலைவர் |
| 02. திரு.L.N.அசேல அமரசேன | கௌரவ உபதலைவர் |
| 03. திரு.R.M கீர்த்தி ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 04. திரு.A.தர்மசிறி அகலவத்த | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 05. திரு.S.A.நவரத்ன பண்டா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 06. திரு.M.G.உபசந்திர ஜயபதி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 07. திரு.U.G.பாலித மகிந்த ஜினதாச | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 08. திரு.M.G.மொஹமட் முராட் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 09. M.G.R.பாலித அபேரத்ன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 10. திரு.R.M.ரவிந்திர தினுக ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 11. திரு.A.C.மொஹமட் பசால் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 12. திரு.D.W.G.ஹேமகுமார நயனாநந்த | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 13. திரு.W.பிரேமதிலக | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 14. A.H.A.ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 15. திரு.R.M.பிரேமரத்ன பண்டார | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 16. திரு.H.M.நீல் சுகத் குமார | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 17. திரு.A.சமந்த குமார ஆரியதாச | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 18. திரு.W.D.G.குணதிலக | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 19. திரு.H.M.யஸஸ் பண்டார தெனுவர | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 20. திரு.R.G.ரஞ்சன் ராஜபக்ஷ | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 21. திரு.G.A.அருண பிரசன்ன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 22. திரு.முத்து நீலமேகம் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 23. திரு.தங்கவேல் காமராஜன் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 24. திருமதி.H.G.சுசிலாவதி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 25. திருமதி.A.W.சத்துரானி சேனாநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| **26.** திருமதி.P.T.G.வயலா வினோதனி சந்திரபால | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 27. திருமதி.K.W.கோகிலா குமாரி வராஹேன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 28. திருமதி.செல்வராஜ் கார்த்திகா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 29. G.R.சமிலா பொன்சேகா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 30. H.G.திருமதி.சுபத்ரா சமரநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 31. திரு.K.சுப்பையா ஜீவா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 32. திருமதி.பிச்சை செல்வபுவனேஸ்வரி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 33. திரு.N.R.M.D.நவரத்ண ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 34. திருமதி.கயானி ஸ்ரீயாமாலா எதுகல்பே | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 35. திரு.சாமிக ருவன் தசநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |

<u>சபைக்கு வருகை தராத உறுப்பினர்கள்</u>

| | |
|---|---|
| 36. திரு.W.M.G.W..B.வேரபிடிய | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 37. திரு.D.G.ஜயந்த கீர்த்திசிங்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |

38. திரு.D.M.திசாயு மஞ்சுள திசாநாயக்க — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
39. திரு.R.M.உதயகுமார திசாநாயக்க — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
40. D. திரு.D.பிரசன்ன மனோஜ் திலகரத்ன — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
41. திரு.R.A.தனுஷ்க இந்திரஜித் — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
42. திரு.குமாரவேல் கணகரட்ணம் — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
43. திருமதி.W.டிமோஷி ஞானலதா — கௌரவ பிரதேச சபை உறுப்பினர்

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
மு.ப 10.00 மணிக்கு சபையின் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

<u>1. கடந்த பொதுக்கூட்ட அறிக்கையை சபை ஏற்றல்</u>
கடந்த 2021 நொவம்பர் மாதம் 25ஆம் திகதி பொதுக்கூட்ட அறிக்கைக்கு சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளல்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
கடந்த 2021 நொவம்பர் மாதம் 25ஆம் திகதி பொதுக்கூட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>
கடந்த சபை அறிக்கையில் 5(2.8)இன் கீழ் கழிவு முகாமைத்துவத்திற்கு 20 இலட்ச ரூபாய் செலவழித்து புஸ்ஸல்லாவையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டம் தொடர்பாக கதைக்கும் போது அவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு சபையில் அனைவரும் தெரிவித்ததாகவும் எனினும் அவ்விடயம் சபை அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. நான் கதைத்தது புஸ்ஸல்லாவையில் நிர்மாணிக்கப்படும் கழிவுத்தொகுதியை குறித்து அல்ல, புஸ்ஸல்லாவையில் வாகன தரிப்பிடம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆகும். நான் கௌத்த மதகுருவுடன் கதைத்தேன், குப்பைபளை கொண்டு சென்று கொட்டுவது இதனால் வெளிக்காட்டப்படுவதால் அதனை அகற்றுமாறும், என்னுடைய கதையில் நான் கதைத்தது இந்நிதி வீணிலே செலவதால் வாகன தரிப்பிடம் ஒன்றை அமைக்குமாறும் அதில் நான் பிரதேச மக்கள் மற்றும் பௌத்த மதகுருவுடன் கதைத்தது அவ்விடயம் தொடர்பாக ஆகும். அதனால் அவ்விடயம் திருத்தப்பட வேண்டும் எனவும், சபையிலுள்ள நாம் அனைவரும் இப்பணத்தை கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பயன்படுத்துமாறு தெரிவித்தாகவும் குறிப்பிட்டார்.

<u>கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்</u>
கடந்த சபை அறிக்கையில் 5(1.6)இன் கீழ் டயலொக் சிம் அட்டை தொடர்பாக கதைக்கும் போது தன்னுடைய சிம் அட்டையை இரத்து செய்யுமாறு கடிதம் வழங்கியது டயலொக் நிறுவனத்திற்கு அல்ல உடபலாத பிரதேச சபைக்கு ஆகும். எனவே அது திருத்தம் செய்யப்பட வேண்டும்.ஷ எனவும் தெரிவித்து கடந்த நொவம்பர் மாத 25ஆம் திகதி பொதுச்சபை அறிக்கையை திருத்தங்களுடன் உண்மையான அறிக்கை என ஏற்றுக் கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

<u>கௌரவ.ஏ.எச்.ஏ.ரத்னாயக்க - உறுப்பினர்</u>
கடந்த முறை சபைக்கு 3 பிரேரணைகளை தான் கொண்டு வந்ததாகவும் அதில் 2 பிரேரணைகள் தொடர்பாக சிற்சில உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டதாகவும் எனினும் அது எதுவும் சபை அறிக்கையில் காணப்படவில்லை எனவும் என்னுடைய பிரேரணை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அதனால் அதனை திருத்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
சபைக்கு சொந்தமான கிணறுகளை குறித்து கதைக்கும் போது பலபேர் கருத்து வெளியிட்டிருப்பதால் அனைத்தையும் உள்ளடக்க தேவையில்லை என்பதால் நான் அனைத்து கருத்துக்களையும் உள்ளடக்காது இச்சபை அறிக்கையை ஆணையாளருக்கு, கணக்காய்விற்கு அனுப்புவதால் சரியாக தயாரித்து அனுப்புமாறு நான் அறிவுறுத்தல் வழங்கினேன் என தெரிவித்தார். கடந்த சபைக்கு நாம் வரவு செலவு திட்டத்தை முன்வைத்ததாகவும் அங்கு மக்கள் விடுதலை முண்ணனியின் கௌரவ உறுப்பினரை தவிர்த்து மற்றைய அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் 2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும், எனினும் நான் சம்பிரதாயத்திற்கு கௌரவம் செலுத்தி வாக்கெடுப்பு நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கியதாகவும் இது உடபலாத மக்களுக்கு

சேவையாற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்டமாகும், அதற்கமைய 2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட ஆவணம் அனைவரும் எதிர்பார்க்கும் விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அனுமதித்துக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் பல்வேறு நிறுவனங்களினால் சிற்சில உறுப்பினர்களுக்கு நிதி கிடைப்பதாகவும் எனினும் நான் எந்தவொரு தினத்திலும் எந்தவொரு உறுப்பினருக்கும் கிடைக்கும் நிதி தொகைகளை யாரிடத்திலிருந்து எங்கிருந்து கிடைத்தது என்று விசாரிப்பதில்லை. அது எனக்கு தேவைப்படுவதில்லை. நான் தலைவராக அனைவரையும் ஒரே விதமாகவே நடாத்துகின்றேன். முன்னால் மாகாணசபை உறுப்பினர் தலைவர் பெயரால் பல பிரேரணைகளை முன்வைத்திருப்பதாகவும், அதில் ஒரு பிரேரணையை எமக்கும் அனுப்பியிருப்பதாகவும், அதற்கமைய கஹவத்த மானுகுலகம பாதைக்கு ஒதுக்கீட்டு நிதித்தொகையை கௌரவ சாந்த உறுப்பினருக்கு அனுப்பியிருப்பதாகவும் டாட்ரியில் செயற்திட்டம் ஒன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரேமரத்ன அவர்களுக்கு அனுப்பியிருப்பதாகவும் கொனடுவெல கோட்டத்திற்கு ரூ.500000.00 ஒதுக்கீட்டு தொகையை அனுப்பியிருப்பதாகவும், எனினும் அதைக்குறித்து நான் அறியவில்லை. எனக்கு அடித்தாலும், குறை கூறினாலும் அனைவரையும் ஒரே விதமாகவே நடாத்துகின்றேன். சபையின் உறுப்பினர் குழுவையும் எனது பிள்ளைகளாகவே நடாத்துகின்றேன். கௌரவ உறுப்பினர் குழுவையும் மரியாதையாகவே நடாத்துகின்றேன். ஆகவே பிழையான புரிந்துணர்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன். வருட இறுதியில் எங்கிருந்தாவது வரும் பணத்தை தனக்கு தேவையானவாறு பங்கிட்டு கொடுப்பதாக உறுப்பினர்கள் நினைக்கின்றனர், ஆனால் எப்பவும் நான் அவ்வாறு செய்யவில்லை என தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**2.கௌரவ தலைவரின் விசேட அறிவித்தல்**

(2)1. தேசிய கணக்காய்வு காரியாலயத்தினால் அனுப்பப்பட்டுள்ள KDB/E/PS-UP/05/2021/747-I 2021 டிசம்பர் 06 உடைய நிதிக் கணக்காய்வு - 2021 முதலாம் காலாண்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசீலரைணக்கமைய குறித்த பரிந்துரைகள் தொடர்பான அறிவித்தல் சபை மயப்படுத்தப்பட்டது.

(2)2. தேசிய கணக்காய்வு காரியாலயத்தினால் அனுப்பப்பட்டுள்ள KDB/E/PS-UP/05/2021/747-I 2021 டிசம்பர் 06 உடைய நிதிக் கணக்காய்வு - 2021 பரிசீலனையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கான விசாரணை தொடர்பான அறிவித்தல் சபை மயப்படுத்தப்பட்டது.

(2)3. உடபலாத பிரதேச சபையின் 5 வருட அபிவிருத்தி திட்டத்திற்காக கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகளை பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவித்தல் சபை மயமாக்கப்பட்டது.

1. **<u>3.சபைக்கு அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள்/மனுக்கள்/முறைபாடுகள்/தொடர்பாடல் கடிதங்களை சபைக்கு முன்வைத்தல்</u>**

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
சபைக்கு முன்வைப்பதற்கான ஆவணங்கள்/மனுக்கள்/முறைபாடுகள்/தொடர்பாடல் கடிதங்கள் இல்லை என தெரிவித்தார்.

1. <u>04. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள பிரச்சினைகள் -</u> இல்லை என தெரிவித்தார்.

2. <u>05. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள பிரேரணைகள்</u>

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
<u>தீர்மான இலக்கம் 5 (1.1)</u>

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>

5(1.1) உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் வருடத்திற்கான உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டங்களுக்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**
உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டத்தை அனுமுதிப்பது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.2)**

5(1.2) உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சி திட்டமிடலுக்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என பிரேரித்தார்.

**கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்**
உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சி திட்டத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.3)**

5(1.3) உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள நடைமுறை திட்டத்திற்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.சாந்த நவரட்ண - உறுப்பினர்**
உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ள நடைமுறை திட்டத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.4)**

5(1.4) உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுகோரல் திட்டமிடலுக்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக் கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.உபசந்திர ஜயபதி - உறுப்பினர்**
உடபலாத பிரதேச சபையில் 2022ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுகோரல் திட்டத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.
.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.3)**

5(1.5) கழிவு முகாமைத்துவத்திற்காக சீமெந்து குப்பைத் தொட்டிகள் 119 ரூ.5002.50 வீதம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்தொட்டிகளை அதிகார எல்லைக்குள் உள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அத்தொகையில் 50%மான ரூ.2510.00 தொகையை அறவிட்டு பெற்றுக் கொடுப்பதற்கு பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக் கொடுப்பது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

<u>கௌரவ.உபசந்திர ஜயபதி - உறுப்பினர்</u>

கழிவு முகாமைத்தவத்திற்காக சீமேந்து குப்பைத் தொட்டிகள் 119 ரூ.5002.50 வீதம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் உடபலாத பிரதேச சபையினால் அக்குபபை தொட்டிகள் ரூ.2510.00 தொகைக்கு அப்படியானால் மொத்த தொகையில் 50மூமான தொகைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும், அத்தொட்டிகள் குறிப்பிட்டளவில் கொம்போஸ்ட் வேலைத்திட்டத்திற்கு நிவாரணமாக கிராமப்புற வீடுகளில் நடைமுறைப்படுத்திக் கொள்வதற்காக வருடாந்தம் சபையினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்திற்காக வழங்கப்படும் கழிவுத் தொட்டிகளை அத்தியாவசிய பிரதேசங்களுக்கு வழங்க வேண்டும் எனவும், அதற்கமைய என்னுடைய ஆண்டியாகடவத பிரதேசம், நாரங்விட்ட பிரதேசம், அத்தடன் தெல்பிடிய ஆகிய பிரதேசங்களுக்கு குப்பைகளை கொட்டுவதற்கு இடம் இல்லாமையால் குப்பைத் தொட்டிகள் தேவையாக காணப்படுவதால் அப்பிரதேசங்களுக்கு வழங்குதல் பொருத்தமாகும் எனவும் தெரிவித்து அப்பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>

கழிவுத் தொட்டிகளை வழங்கும் போது எமக்கு பிரதானமாக பிரச்சினைகள் தோன்றுவது புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் என்பதால் அப்பிஜைரீரதேசத்திற்குமு் பாரதெக பிரதேசத்திற்கும், கழிவுத் தொட்டிகளை சுற்றாடல் அதிகாரியின் ஊடாக வழங்கப்பட வேண்டும். இக்கழிவுத் தொட்டிகளினால் கொம்போஸ்ட் தயாரித்துக் கொள்ள முடியும் என்பதால் புஸ்ஸல்லாவையிலுள்ள மக்களுக்கு அறிவுறுத்தி விளக்கப்படுத்தளின் பின் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் இக்கழிவுத் தொட்களை ரூ.5002.50 தொகைக்கு சபை பெற்றுக் கொண்டிருந்தாலும், மக்களுக்கு வழங்குவது ரூ.2510.00 தொகைகது என்பதால் அது இலாபகரமானது. அதனால் இதன் முதல் கட்டமாக புஸஸல்லாவ பிரதேசத்திற்கும் அதன்பின் பாரதெக, அடபாகே, ஆண்டியாகடவத போன்ற பிரதேசங்களுக்கும் வழங்க வேண்டும் எனவும் அதனால் விசேட அறிவுறுத்தல் குழு ஒன்றை நியமித்து அறிவுறுத்தலின் பின் வழஙக வேண்டும் எனவும் அப்போது 10மூ கழிவு பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும் எனவும், அரசாங்கத்தினால் சிற்சில தீர்வுகளை கழிவு பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது, அதனால் இது தொடர்பாக தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

<u>கௌரவ.அகலவத்த - உறுப்பினர்</u>

குப்பை தொட்டிகளுக்காக ரூ.2510.00 தொகையை செலுத்துவதற்கு மக்களுக்கு சிரமம் இருப்பதால் தொகையை குறைத்து சமூக நிவாரணமாக வழங்கினால் அது மிகவும் சிறந்தது எனவும், மேலும் பாதைகள் முழுவதும் குப்பைகளை இடுவதாகவும், அடபாகே ஓடைக்கு வாகனங்களில் வந்து குப்பைகளை இடுவதாகவும், அதனால் சபையின் ஊடாக பாலத்தின் இருமருங்கிலும் இரு குப்பைத் தொட்டிகளை வைக்குமாறும் மேலும் மஹர ஸ்கன்சா பாதைக்கு மேல் பாதைக்கு குப்பைகளை இட்டுச் செல்வதால் அவ்வாறான இடங்களிலும் சில குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும். குப்பை போட வேண்டாம் என பதாதைகள் பொருத்துவதில் பலனில்லை. சங்குவார் பிரதேசத்திலும் சுற்றுலா பிரயாணிகள் வந்து குப்பைகளை கொட்டி விட்டுச் செல்வதால் அவ்வாறான சுற்றுலா வலயங்களிலும் பொருத்தமான இடங்களைப் பார்த்து குப்பை தொட்டிகளை வைக்க வேண்டும் எனவும், மற்றும் பிரசித்த இடங்களில், வாகனங்கள் நிறுத்துமிடங்களில் குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும், அப்போது எமது குப்பை அள்ளும் டிரக்கடர் இரண்டு நாட்களுக்கு ஒருமுஜற அல்லது வாரத்திற்கு ஒருமுறை இக்குப்பைகளை எடுத்துச் சென்றால் மிகவும் பெறுமதியாகும், அவ்வாறான வேலைத்திட்டத்தை மேற்கொண்டால் குப்பைகளிலிருந்து வீசும் துர்நாற்றம் கூட இல்லாதொழிக்கப்படும் என தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>

இக்கதை உண்மை என்றாலும் இக்குப்பை தொட்டிளை உக்கக்கூடிய பொருட்களை மாத்திரம் இடுவதற்கு பாவிப்பதாகவும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதானால் எமக்கு 3 குப்பை தொட்டிகளை உக்கூடிய, உக்காத மற்றும் கடதாசிகள் என வைக்க நேரிடும். இத்தொட்டிகளை உக்கக்கூடிய பொருட்களை மாத்திரம் இடுவதற்கு பாவிக்க வேண்டும் எனவும், அதனால் நாம்

கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் இல்லாவிட்டால் இது பாரிய பிரச்சினையாகும் எனவும் தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**

அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
**<u>தீர்மான இலக்கம் 5 (1.6)</u>**

5(1.6) கொரோனா கொள்ளை நோய் நிலமை மற்றும் விலை அதிகரிப்பு, பொருட்களின் பற்றாக்குறை காரணமாக 2021ஆம் வருடத்தில் சபை நிதியின் கீழ் பூர்த்தி செய்ய முடியாத வேலைத்திட்டங்களை 2022ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை காலத்தை நீடிப்பதற்காக பொதுச்சபின் அனுமதியை பெற்றுக் கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**<u>கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்</u>**

கௌரவ தலைவர் கொண்டு வந்த பிரேரணையை தொழில்நுட்ப அதிகாரி ஜயதிலக அவர்கள் தொழில்நுட்ப குழுவில் முன்வைத்ததாகவும் இங்கு பொருட்களின் பற்றாக்குறை மற்றும் கொரொனா நிலமை காரணமாக சில உறுப்பினர்களுக்கு செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியாது போனதால் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை அச்செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு காலத்தை நீடிப்பதற்கு கொண்டு வரப்பட்ட பிரேரணையும் மேலும் இத்தினத்திற்கு செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியாது போனால் கடன் பெறுனர் நிலமை ஒன்றை மேற்கொள்ள முடியாது எனவும் அதனால் அனைவரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் முதலாவதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்களை மாத்திரம் மேற்கொள்ளுமாறு கோண்டு வரப்பட்ட பிரேரணையை நாம் ஆமோதிக்கின்றேன்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**

2022 ஜனவரி 31ஆம் திகதி வரை மாத்திரம் இதற்காக கால அவகாசம் வழங்கப்படும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.டபிள்யு.டி.ஜி.குணதிலக - உறுப்பினர்</u>**

16% செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இதற்கு முன் தெரிவித்து இருப்பதாகவும் நான் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 6 மாதத்திற்கு மேலான காலம் சென்றிருந்தாலும் தொழில்நுட்ப அதிகாரி ரணசிங்க அவர்கள் செயற்திட்ட பரிசீலணைக்கு வருவதில்லை எனவும், நானும் அரச அதிகாரி எனவும், எனினும் சபைக்கு வந்து அமர்ந்திருப்பதாகவும், அதனால் பல்லேகம கோட்டத்திற்கு இனிவரும் காலத்திற்கு தொழில்நுட்ப அதிகாரி ரணசிங்க அவர்கள் தேவைப்பட மாட்டார் எனவும், இதில் கௌரவ தலைவர் மற்றும் செயலாளருக்கு செய்யக்கூடியது எதுவுமில்லை எனவும், அதனால் வேறொரு தொழில்நுட்ப அதிகாரி ஒருவரை தமது கோட்டத்திற்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>**

செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு மாதம் காலத்தை நீடித்தமை தொடர்பாக கௌரவ ஆளுநருக்கு நன்றி தெரிவிப்பதாகவும்உறுப்பினர்களுக்கு பல்வேறுபட்ட நிறுவனங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் கிடைத்திருப்பதாகவும், எனினும் சீமெந்து மற்றும் ஏனைய பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் ஒப்பந்ததாரர்கள் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு பயப்படுவதாகவும், என்னுடைய பிரதேசத்தில் தொழில்நுட்ப அதிகாரி ஜயதிலக அவர்கள் மிகவும் சிறப்பாக கடமைகளை மேற்கொள்கின்றார். உறுப்பினர்கள் தயக்கம் கொள்ளத் தேவையில்லை. யாதாயினும் ஒரு அதிகாரி அவ்வாறு செய்தால் அவரின் தனிப்பட்ட கோவைக்கு கடிதம் ஒன்றை இடுமாறும் அப்போது அதிகாரிகள் சிறப்பாக கடமைகளை மேற்கொள்வார்கள் எனக் குறிப்பிட்டார். இவ்வாறான நிலமைகள் குறித்து தேடிப்பார்க்க வேண்டும். மேலும் செயற்திட்டங்களுக்கான பணத்தை பெற்றுக் கொள்வதற்கு சங்கங்களில் உள்ளவர்கள் வந்து சிரமத்திற்கு உள்ளாவதாகவும், அதற்கமைய காணப்படும் பலவீனங்கள் தொடர்பாக தேடிப்பார்த்து சரிப்படுத்துமாறும் கௌரவ உறுப்பினர்களுக்கான மரியாதையை பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
கௌரவ குணதிலக உறுப்பினரின் கருத்து உண்மையானது. எனினும் அரச அதிகாரிகள் தொடர்பாக எமக்கு தேவையானவாறு நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. தாமதப்பட்டிருக்கும் செயற்திட்டங்கள் அனைத்தையும் தொழில்நுட்ப அதிகாரி இந்திராணி அவர்கள் ஊடாக மேற்கொண்டு தருவதாக கூறினார்.

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**
எதிர்வரம் வருடத்தில் எமது உறுப்பினர்கள் 43 பேரும் முன்வைக்கும் செயற்திட்ட பிரேரணைகளை ஒன்று சேர்த்து அச்செயற்திட்டங்களுக்கு குறித்த காலத்தை வழங்கி மதிப்பீடுகளை தயாரித்து வேலை விபரத்தை நீளம், அகலம், உயரம் என குறிப்பிட்டு திட்டம் ஒன்றை வழங்க வேண்டும் எனவும், அவ்வாறில்லாமல் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டால் வெறுமனே காலம் வீணாவதாகவும் அப்போது அடுத்த வருடத்தில் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது வேலை விபரத்தை சரியாக முன்வைக்க வேண்டும் எனவும், ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் போது திட்டம் ஒன்றை வழங்க வேண்டும் எனவும், ஜனவரி மாதம் வழங்கப்படும் பிரேரணைகள் தொடர்பாக பெப்ரவரி மாதத்தில் மதிப்பீடகள் வழங்க வேண்டும் எனவும், ஏப்ரல் மாதமாகும் போது வேலைகளை முடிவுறுத்தி பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லாவிட்டால் அதற்காக திகதி ஒன்றை வழங்க வேண்டும். அப்போது வேலைகளை முடிவுறுத்தி தரப்பரிசீலனை அறிக்கை வழங்கிய பின் கால அவகாசம் வழங்கி நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சில சங்கங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு 6,7 மாதங்கள் இருப்பதாகவும், எப்பொதும் தொழில்நுட்ப அதிகாரிகளை குற்றம் சொல்வதால் சகோதரர்களை போல் இருக்கும் அதிகாரிகள் குழு மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் பிரச்சினைகள் தோன்றி வைராக்கியம் உள்ளவர்களைப் போல் மாறுவதால் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு செயற்திட்டங்களை பிரித்து கொடுத்து திட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயலாளர் வகைபார்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

**கௌரவ.பாலித அபேரத்ன - உறுப்பினர்**
இது வழமையாக கதைக்கப்படும் ஒரு தலைப்பாகும். கடந்த வருடம் உறுப்பினர்களுக்கான நிதி ரூ.700000.00 எனவும், எனினும் தொழில்நுட்ப அதிகாரிகளின் பிரச்சினையை போன்றே ஏனைய அனைத்து வேலைகள் தொடர்பாகவும் பிரச்சினை ஒன்று காணப்படுகிறது. அதனால் ஒரு வருடத்திற்குள் இச்செயற்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு முடியாமல் போனதாகவும், பீ.ஆர்.டி செயற்திட்டங்களை கங்க இஹல சபையில் மேற்கொண்டதாகவும், எனினும் எமது சபையில் அச்செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. குறித்த நிறுவனங்களிடத்தில் கேட்ட போது சிற்சில விடயங்களை முன்வைத்தனர். எமது கிராமத்திற்கு வந்த செயற்திட்டங்கள் கூட கிடைக்கவில்லை, என்னுடைய 20 இலட்ச ரூபாய் கிடைக்கவில்லை, அந்த செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக இடுத்த வருடத்தில் செய்ய முடியுமா இல்லையா என அறிவிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
கௌரவ ரத்னாயக்க உறுப்பினர் செயற்திட்டங்களை மேற்கொண்டதாகவும், நாம் மதிப்பீடுகளை தயாரித்து அனுப்பினாலும் பின்று வேலைகளை மேற்கொள்வதற்கு எமக்கு அறிவிக்கவில்லை என்பதால் வேலைகளை ஆரம்பிக்க முடியாது எனவும், அது தொடர்பாக அறிவுறுத்தல்கள் கிடைக்காமையால் தனக்கு செய்வதற்கு எதுவுமில்லை எனவும், கௌரவ நிஸ்ஸங்க உறுப்பினர் அனுப்பிய செயற்திட்டங்களை 31ஆம் திகதிக்கு முடிவுறுத்துமாறு அறிவுறுத்தி இருப்பதாகவும் எமது அதிகார பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு தான் விரும்புவதாகவும், நான் எதிர்க்கவில்லை எனவும், எனினும் சட்டரீதியான அனுமதி கிடைக்காமையால் செய்ய முடியவில்லை எனவும், ஜனவரி மாதத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுமாறு கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.7)**

5(1.7) 2022ஆம் வருடத்தில் பொதுச்சபை கூட்டங்களை நடாத்தவதற்கு நியமிக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வத பொருத்தமாகும் என தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| ஜனவரி 20 | பெப்ரவரி 18 | மார்ச் 18 |
| ஏப்ரல் 08 | மே 19 | ஜீன் 23 |
| ஜீலை 24 | ஆகஸ்ட் 18 | செப்டெம்பர் 22 |
| ஒக்டோபர் 20 | நொவம்பர் 17 | டிசம்பர் 15 |

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**

இதில் அனைத்து தினங்களும் அல்ல சில தினங்கள் மாற்றமடையலாம், 2022ஆம் வருடத்தில் பொதுச்சபையை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள தினங்கள் தொடர்பான பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5(1.8)**

5(1.8) கொவிட் தடுப்பூசி வழங்குதல் நடவடிக்கைகளுக்காக ரூ.15 இலட்ச தொகை பொதுச்சபையினால் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் எதிர்வரும் காலத்தில் பூஸ்டர் தடுப்பூசியை வழங்குவதற்கான நலன்புரி செலவுகளாக மேலும் ரூ.350000.00 தொகை உள்ளடங்களாக ரூ.1850000.00 செலவழிப்பதற்கு பொதுச்சபையின் அனுமதியை வழங்குவது பொருத்தமாகும் என பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.அகலவத்த - உறுப்பினர்**

ரூ.1500000.00 தொகைக்கு மீண்டும் ரூ.350000.00 தொகையை சேர்த்து தடுப்பூசி வழங்கல் நடவடிக்கைகளுக்காக ரூ.1850000.00 தொகையை செலவிடுதல் பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.
மேலும் தொலுவ பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் எமது சபையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் பாராட்டுக்கு உட்பட்டதாகவும் எனினும் இறுதியில் மிகுதியாகும் கழிவுகளை சேகரிப்பதில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதாகவும் அது தொடர்பாக அவதானம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5(1.9)**

5(1.9) பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் நில்லம்ப, ஹல்ஓய, வாரியகல, வட்டகொட, தொலுவ, காரியாலய சந்தி, குருகெலே மற்றும் ராஜமலே ஆகிய குடிநீர் செயற்திட்டங்களில் புதிய நீர் இணைப்புக்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருப்பதால் புதிய நீர் இணைப்புக்களை கோருபவர்களுக்கு இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பவர்களின் பெயருக்கு பதிலாக பெயரில் திருத்தம் செய்து நிலுவை தொகைகளை அறவிட்டு புதிய ஒப்பந்தத்தின் கீழ் நீர் இணைப்பு வழங்குவது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்**

புதிய ஒப்பந்தததின் கீழ் அந்த நிலுவை தொகைகளை அறவிட்டுக் கொண்டு நீர் இணைப்புக்களை வழங்குதல் பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**தீர்மான இலக்கம் 5.2 (1)**
**கௌரவ.அகலவத்த உறுப்பினரின் பிரேரணைகள்**

5 (2.1) தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு சூரிய சக்தி வீதி விளக்குகள் பொருத்துதல் பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

உடபலாத பிரதேச சபை அதிகார எல்லைக்குள் புஸ்ஸல்லாவ நகரத்தில் பாரிய வீதி விளக்கு பிரச்சினை காணப்படுவதாகவும் வீதி விளக்குகள் 30 போல பொருத்தப்பட்டிருந்தாலும் தற்போது 4 பல்ப்கள் மாத்திரம் செயற்படுவதாகவும், அதனால் சூரிய சக்தி வீதி விளக்குகள் தூண்கள் சிலவற்றை புஸ்ஸல்லாவ நகரத்தில் நிர்மாணித்தால் மிகவும் சிறந்தது எனவும், அத்துடன் தொலுவ நகரம், கஹவத்த, புபுரெஸ்ஸ, மில்லகஹமுல, பன்விலதென்ன, ஆகிய எமது பிரதேச சபையினால் இவ்விடங்களுக்கும் சூரிய சக்தி வீதி விளக்குகள் பொருத்துதல் பொருத்தமாகும் என பிரேரிக்கின்றேன்.

அத்துடன் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய விருப்பத்தின் பேரில் தன்னுடைய கோட்டத்திற்கு ரூ.50000.00, ரூ.60000.00 செலவழித்து ஒரு சூரியசக்தி வீதி விளக்கையாவது பொருத்திக் கொண்டால் மிகவும் பெறுமதியானது எனவும், அப்போது ஒவ்வொரு கிராமத்திற்கும் வெளியிலேயே செயற்திட்டங்களை மேற்கொண்டு வீதி விளக்கு பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் பொருத்தமாகும் என பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.பாலித அபேரத்ன - உறுப்பினர்**
தேசிய கொள்கைக்கமைய சூரியசக்தியை வலுவூட்டல் செய்தல் அதிமேதகு ஜனாதிபதியின் நோக்கமாகும். நாட்டில் காணப்படும் வலுச்சக்தி பிரச்சினைக்கு சூரிய சக்தியை மற்றும் காற்றலுத்த சக்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வது அரசின் நோக்கமாகும். எமக்கு காணப்படும் பிரச்சினை என்னவெனில் நிதியாகும். ஒரு வீதி விளக்கிற்கு 5000.00 ரூபாய் செலவாகின்றது. உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்நடவடிக்கைகயை மேற்கொள்வது சிறந்தது. எனினும் நடைமுறை பிரச்சினைகள் காரணமாக இவற்றை பராமரிப்பதில் பிரச்சினை காணப்படுகிறது. விலைமனு கோரி பெனல் சுத்திகரிப்பு செய்ய வேண்டும். இவ்விளக்கொன்று 20 வருடம் வரையில் காணப்படும். மின்பட்டியல் இல்லாத காரணத்தால் சபைக்கு இலாபகரமானது. ஆகவே வருடத்திற்கு ஒன்று என்ற கணக்கிலாவது சூரியசக்தி மின் விளக்குகளை பொருத்த வேண்டும் என தெரிவித்து அப்பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**தீர்மான இலக்கம் 5.2 (2)**
**கௌரவ.தினுக ரத்னாயக்க உறுப்பினரின் பிரேரணைகள்**

5.2(2) வெவதென்ன பாடசாலை அருகிலுள்ள சந்தியில் தறகாலிகமாக நடாத்திச் செல்லப்படும் 5 முச்சக்கர வண்டிகளை நிறுத்தக்கூடிய தரிப்பிடங்களை உடபலாத பிரதேச சபையின் கீழ் பதிவு செய்து நடாத்திச் செல்லுதல் பொருத்தமாகும் என பிரேரிக்கின்றேன்.

தற்போது வெவதென்ன பாடசாலைக்கு கீழே சந்தியில் சிறிய நிலப்பரப்பில் முச்சக்கர வண்டிகள் 5-6 நிறுத்தி வாலிபர்கள் சிலர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அவ்விடத்தில் முறையற்ற தன்மை காணப்படுவதால் பிரச்சினைகள் தோன்றிதாகவும், ஆகவே சபை என்ற ரீதியில் சபைக்கு வருமானம் கிடைக்கும் வேலைத்திட்டமாக இவ்விடத்தில் எமது சபையின் ஒத்துழைப்புடன் தேவையான நிலப்பரப்பை தயார் செய்து வாலிபர்களுக்கு செய்யும் உதவியாக முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்றை நடாத்திச் செல்வதறகு தேவையான அனுமதியை பெற்றுத் தருமாறு குறிப்பிட்டார்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>
இவ்விடத்தில் முச்சக்கர வண்டிகள் 5-6 போல் காணப்படுகின்றன. அதனால் சபைக்கு வருமானம் கிடைக்கும் வண்ணம் நிலத்தை தயார் செய்ய வேண்டும். இதற்கு முன் சில உறுப்பினர்கள் தரிப்பிடங்கள் வர்த்தமானி செய்யப்பட்டிருந்ததால் சபைக்கு ரூ.500000.00 போன்ற வருமானம் கிடைப்பதாகவும் அதற்கமைய சிறிய அளவிலாவது சபைக்கு வருமானத்தை ஈட்டித் தருவது கடமையாகும். அப்பிரேரணை தொடர்பாக நன்றி தெரிவித்து பிரேரணைக்கு தேவயைான உதவிகளை சபையினால் செய்த கொடுக்க வேண்டும் என தெரிவித்து அப்பிரேரணையை ஆமோதித்தார்.

<u>கௌரவ.பாலித அபேரத்ன - உறுப்பினர்</u>
தற்போது எமக்கு காணப்படும் தரிப்பிடங்களில் ஒருவர் இருவர் வேறு யாருக்கும் ஹயர் ஓட விடுவதில்லை அதனால் சபை அனுமதித்த முச்சக்கர வண்டி தரிப்பிடங்களின் எண்ணிக்கைக்கு மேல் ஹயர் ஓடுவதற்கு புதிய ஒருவருக்கு அனுமதியை வழங்கும் அதிகாரம் கௌரவ தலைவரக்கு இருப்பதாக தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

<u>தீர்மான இலக்கம் 5.2 (3)</u>
<u>கௌரவ உப தலைவர் அசேல அமரசேன அவர்களின் பிரேரணைகள்</u>

5.2(3) இலக்கம் 171/6 கீரபனை கம்பொல விலாசத்தில் வசிக்கும் ராசைய்யா பாக்கியலட்சுமி அவர்களுக்கு சொந்தமான பர்சஸ் 4.14 உடைய நிலத்தின் கட்டப்படும் கட்டிடம் தொடர்பாக கட்டிட நிர்மாண விண்ணப்ப படிவத்தை அனுமதிப்பது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
கௌரவ உப தலைவர் முன்வைத்த பிரேரணைக்கு என்னால் சட்டரீதியான அனுமதி வழங்க முடியாது என தெரிவித்ததாகவும், எனினும் பொதுச்சபையின் தீர்மானத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு முன்வைத்திருப்பதாகவும், வரைபடத்தை அனுமதித்துக் கொள்ள வந்ததாகவும் என்னும் என்னால் அனுமதி வழங்க முடியாது என நான் தெரிவித்தேன். வழங்குவதானால் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு சிறிவ வீடொன்றை கட்டுவதற்கு அனுமதி வழங்க முடியும் எனவும் எனினும் சிறிய அளவு என்பதால் தொடர்ந்தும் இதனை செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>
இவர் கணவனை இழறந்து மிகவும் கஷடமான வாழ்க்கையை வாழ்ந்து நிலத்தை பெற்றுக் கொண்டுள்ளதாகவும், இப்பிரேரணையை நான் சபைக்கு கொண்டு வந்ததாகவும், உடபலாதையில் புஸ்ஸல்லாவ வகுவபிடிய போன்ற இடங்களில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகிறது. அவர்களின் 4 பர்சஸ் நிலம் உள்ளவரகக்கும் காணப்படும் பிரச்சினை இதுவாகும். இப்பெண்ணால் இதற்கு அப்பால் எதுவும் செய்துகொள்ள முடியாது. ஆகவே சபை சட்டங்களில் காணப்படும் கௌரவ தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய இவர்களுக்கு வேறு நிலங்கள் இல்லாவிட்டால் கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக அதனை உறுதிசெய்து அக்கட்டிடத்தை அனுமதிக்க முடியும் எனவும், உறுதியுரை ஒன்றில் வழங்கி இவற்றை செய்ய முடியும் எனவும், வயல் ஒன்றை நிரப்பியிருந்தால் அனுமதிக்க முடியாது. அதிகார எல்லையிலுள்ள அநேகருக்கு வங்கிக் கடன்களை பெற்றுக்கொள்ள அவசியம் என்பதால் சட்டரீதியாக வரைபடங்களை அனுமதித்துக் கொள்ள செல்லும் போது பிரச்சினைகள்

தோன்றுவதாகவும், அவர்களுக்கு நிவாரணம் இல்லை. கொடவெல பிரதேசத்தின் பெண் ஒருவர் தமது மகனிற்கு மின்சார சபையில் வேலை செய்வதால் ரூ.50 இலட்ச கடனை பெற்றுக் கொடுப்பதற்கு வங்கி அனுமதித்ததால் கட்டிடத்தை கட்டும் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு சபைக்கு வந்தபோது சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அவர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என தெரிவித்திருப்பதாகவும், எனினும் நாம் மக்கள் பிரதிநிதிகளாய் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும், இங்கு வஞ்சனை, பொய் இல்லாவிட்டால் எவ்வாறாவது அனுமதித்து வழங்க வேண்டும். கருணை கொண்டு இந்த அனுமதியை வழங்க முடியும் எனவும், அதனால் தேடிப்பார்த்து அனுமுதித்து தருமாறு தெரிவித்தார்.

<u>கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்</u>
வேறு இடங்கள் இவருக்கு இல்லையா என தேடிப்பார்த்து கௌரவ தலைவரின் அதிகாரங்களுக்கமைய விண்ணப்பதாரரை குறித்து கருணையுடன் பார்த்து அனுமதி வழங்க முடியும் என குறிப்பிட்டு இருப்பதால் இந்த பரிதாபத்திற்குரிய பெண்மணிக்கு தேவையான கட்டிட நிர்மாண விண்ணப்பத்திற்கு தேவையான அனுமதியை வழங்குமாறு தெரிவித்தார்.

<u>கௌரவ.அகலவத்த - உறுப்பினர்</u>
பரிதாபத்திற்குரிய நபரானால் அனுமதியை வழங்க முடியும். எனினும் கடிதத்தின் பிரகாரம் பரிதாபத்திற்குரியவராக தெரியவில்லை. ரூ.50 இலட்ச கடனை பெறுவதற்கு செல்வதாகவும், அதற்கமைய பார்க்கும் போது இந்நிலத்தை அனுமதித்துக் கொண்டு யாருக்காவது விற்பளை செய்யப் போவதாகவும், இது தொடர்பாக நிலைய பரிசோதனையை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை பொருத்தமாகும் எனவும் மேலும் ஒரேடியாக இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாது சந்தசிறிவத்தையில் அரச நிலங்களும் இருப்பதால் மேலும் பரிசீலனை செய்து பார்த்து அதன்பின்பு இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வோம் என நான் பிரேரிக்கின்றேன்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
எமது தொழில்நுட்ப அதிகாரி மற்றும் மேலும் சில உறுப்பினர்கள் கலந்து கொண்டு பரிசீலனை செய்து பார்த்து அதன் பின் அனுமதியை வழங்குமாறு குறிப்பிட்டார்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>
நானும் தெரிவிப்பது தொழில்நுட்ப அதிகாரி ஊடாக பரிசீலனை செய்து பார்த்து பிரச்சினை ஒன்று இல்லாவிட்டால் அனுமதி வழங்குங்கள் என்பதையாகும் என தெரிவித்தார்.

<u>கௌரவ.அகலவத்த - உறுப்பினர்</u>
இதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எனினும் தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், இவ்வாறான பிரேரணைகளை முன்வைக்கும் போது நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு முன்வைத்தால் எம்மால் பார்ப்பதற்கு முடியுமாக இருந்திருக்கும் அவ்வாறில்லாமல் ஒரேடியாக சபைக்கு முன்வைக்கும் போது இது தொடர்பாக சந்தர்ப்பம் வழங்க முடியாது எனவும் தெரிவித்தார்.

<u>தீர்மான இலக்கம் 5.2 (4)</u>
<u>கௌரவ.யஸஸ் தெனுவர உறுப்பினரின் பிரேரணைகள்</u>

5.2(4) வத்தேஹேன குடிநீர் செயற்திட்டத்தில் பிரதான நீர்க் குழாயை சபை நிதியிலிருந்து தயாரிப்பதற்கு பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

நான் கடந்த சபையில் இப்பிரேரணையை கொண்டு வந்தேன். கௌரவ அகலவத்த உறுப்பினர் ஆமோதித்தார். 100 குடும்பங்களுக்கு நீரை வழங்கும் பிரதான குழாய் உடைந்திருப்பதால் கடந்த சபையில் அதனை திருத்துவதற்கு அனுமதியை வழங்கினாலும் இன்னும் குழாய் திருத்தம் செய்யப்படவில்லைஇதில் உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருக்கிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் அதனை இதற்கு தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. உடைந்த நீர்த் தொகுதியை புனரமைப்பு செய்ய வேண்டும். குறித்த உறுப்பினர் அதனை செலுத்துவாரா இல்லையா என்பது முனடபதாக உள்ள பிரச்சினையாகும், இல்லாவிட்டால் தெல்பிடிய பிரதேசத்திற்கு நீர் இல்லாமல் செல்லும், ஆகவே சபை நிதியிலிருந்து பணம் செலுத்தி நீர்க்குழாயை புனரமைப்பு செய்யுமாறு குறிப்பிட்டார்.

மேலும் 2019ஆம் வருடத்தில் சபையில் பிரேரணை ஆமோதிக்கப்பட்டிருந்த தெல்பிடிய சம்போதி விகாரைக்கு இன்றுவரை நீர் வசதி வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
நீர்குழாயை திருத்தம் செய்ய பொருட்கள் வாங்க முடியாதுள்ளது. எல்லோரும் குழாய்களை உடைத்துவிட்டு திருத்தம் செய்யச் சொன்னால் நான் என்ன செய்வேன், தேவையான பொருட்கள் இல்லை என தெரிவித்தார்.

<u>கௌரவ.அகலவத்த - உறுப்பினர்</u>
எமது சபையில் நிதியை செலுத்தி இந்த குழாயை திருத்தம் செய்து அதற்கு பின் உடைத்தவர்களிடத்தில் பணத்தை அறவிட்டுக் கொள்வோம் என தெரிவிதது அப்பிரேரணையை ஆமோதித்தார்.

அத்துடன் எமது குடிநீர் செயற்திட்டத்தில் வத்தேஹேன போதி ரெக்காராம விகாரைக்கும், எஸ்கொட்' விகாரைக்கும், சம்போதி விகாரைக்கும், பள்ளிக்கும் இலவசமாக நீர் வசதியை வழங்குவோம் என தெரிவித்தார்.

<u>கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்</u>
நீர் கட்டணங்கள், மின்வசார கட்டணங்களை அறவிடும் போது வழிபாட்டு தலங்களுக்கு ஒருசில நிவாரண எல்லை காணப்படுகிறது. அதற்கமைய நீர்க்கட்டணங்களை தயாரிக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும், அவ்வாறில்லாமல் இலவசமாக நீரை வழங்க முடியாது எனவும், அப்போது பெறுமதி இல்லாமல் போகும் எனவும் தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
நான் நீரை வழங்குகின்றேன் எனினும் பட்டியல்களை செலுத்துமாறு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

<u>கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்</u>
தெல்பிடிய விகாரையின் நீர்ப் பட்ணலை நான் செலுத்துகின்றேன் என தெரிவித்தார்.

<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

<u>தீர்மான இலக்கம் 5.2 (5)</u>
<u>கௌரவ பாலித உறுப்பினர் அவர்களின் பிரேரணைகள்</u>
5.2(5) இல்லகொல்ல வாரியகல பாதையில் நீர் வடிகாலமைப்பு திணைக்களத்தின் அபிவிருத்தி பணிகள் காரணமாக மக்கள் சிரமத்திற்கு உள்ளாவது தொடர்பாக அந்நிறுவனத்திற்கு அறிவிப்பது பொருத்தமாகும் என தெரிவித்தார்.
இப்பாதை தொடர்பாக தான் நீண்ட கருத்துக்களை வெளியிட்டதாகவும், இல்லகொல்ல பாதை நீர் வடிகாலமைப்புச் சபையினால் 1KM அளவில் வெட்டப்பட்டிருப்பதாகவும், தற்போது ஒரு வருடம் கடந்துள்ளதாகவும் இதற்காக சபையின் நிதி வைப்பிட்டு இருந்தாலும் பாதையை அபிவிருத்தி செய்யவில்லை எனவும், அதனால் மக்களின் வீடுகளின் மதில்கள் உடைந்து வீடுகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுளள்து. இல்லகொல்ல பாதை மழைக்கு தொலுவ வரை கழுவப்பட்டு சென்றுள்ளதாகவும், அதனால் நீர் வடிகாலமைப்பு சபைக்கு அறிவித்து பாதை அபிவிருத்தியை சரியாக செய்யாவிட்டால் வைத்துள்ள வைப்பீட்டுத் தொகையை திரும்ப செலுத்த போவதில்லை என அறிவிக்க வேண்டும் எனவும், மிக விரைவில் இல்ல பாதையின் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு நீர் வடிகாலமைப்பு திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு தெரிவித்தார்.

<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>
இப்பாதை மறைந்த முன்னால் பிரதமர் செய்த பாதையாகும், அவருக்கு புண்ணியம் கிடைக்க மக்கள் பயணிக்கின்றனர், யாராவது எதையாவது செய்தால் அதனை பாராட்ட வேண்டும். எனினும் இப்பாதையை நீர் வடிகாலமைப்புச் சபை நினைத்த நினைத்தவாறு நடைத்துப் போடுகின்றது. கம்பொல நீர் வடிகாலமைப்பு திணைக்களத்திலும் இவ்வாறு பாதைகள் நீர் குழாய்களை பொருத்துவதற்காக உடைத்துப் போடப்பட்டுள்ளது. சபைக்கு பணம் செலுத்துவதாக அவர்கள்

தெரிவிக்கின்றனர், இல்லகொல்ல பாதையை செய்வதற்கு கௌரவ பாலித உறுப்பினர் கஷ்டப்பட்டார். இப்பாதையை முன்பிருந்தவாறே மிக விரைவாக அபிவிருத்தி செய்து தருமாறு உடபலாத பிரதேச சபையின் வேண்டுகோளாக நீர் வழங்கல் அமைச்சருக்கு, கெட்டம்பே அலுவலகத்திற்கு, கம்பொல அலுவலகத்திற்கு கடிதங்களை அனுப்புமாறு தெரிவித்து அப்பிரேரணையை ஆமோதித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

நான் அனைத்து உறுப்பினர்களிடத்திலும் கௌரவமாக வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன். இதற்கு பின் தலைவராக நான் எந்தவொரு அவசர பிரேரணையையும் சபைக்கு முன்வைக்கப்ப போவதில்லை. அவ்வாறே உறுபபினர் குழுவிலுள்ள யாரும் அவசர பிரேரணைகளை முன்வைக்க வேண்டாம் என அறிவுறுத்துகின்றென். ஏனெனில் அதனால் சபையில் உறுப்பினர்களிடத்தில் பிரச்சினைகளும் பேதங்களும் உருவாகின்றன. அதனால் எதிர்காலத்தில் நிகழ்ச்சி நிரலின் பிரேரணைகளை மாத்திரம் முனவைக்குமாறு பொதுச்சபைக்கு தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**செயற்திட்ட பிரேரணைகள்**

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்களின் பிரேரணைகள்**

5 (2:2) புஸ்ஸல்லாவ பொது வியாபாரசந்தையின் பின் பக்கம் மதிலை கட்டுதல் ரூ.40000.00ஐ பயன்படுத்திக் கொள்ளல் பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.மொஹமட் முராட் உறுப்பினர் அவர்களின் பிரேரணைகள்**

5(2.3) உனம்புவ ஹுனுகலவத்த 60/4/A தெனிய கிருஷ்ணகுமார் அவர்களின் வீட்டருகில் உள்ள பாதையில் பக்கவாட்டு மதிலில் படிக்கட்டை அபிவிருத்தி செய்தல் ரூ.350000.00 செயற்திட்டத்திற்கு பதிலாக திருத்தப்பட்ட செயற்திட்டமாக

1) கம்பொல இலங்கவத்த 178 இக்பார் அவர்களின் வீட்டருகில் உள்ள பாதையை கொன்க்ரீட் செய்தல் ரூ.200000.00
2) இலங்கவத்த 2 இலக்க 251.ஃது ரிப்கான் அவர்களின் வீட்டருகில் உள்ள காணை அமைத்தல் ரூ.150000.00ஐ பயன்படுத்திக் கொளள்ல் பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.அகலவத்த - உறுப்பினர்**

முன்வைக்கப்பட்டுள்ள செயற்திட்ட பிரேரணைகள் மற்றும் திருத்தப்பட்ட செயற்திட்ட பிரேரணைகளை மேற்கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**(6) நிர்வாக குழ அறிக்கைகளை முன்வைத்தல்**

1. 2021.11.25 திகதியுடைய நிதி மற்றும் கொள்கை தயாரிக்கும் குழு அறிக்கை மற்றும் 2021.12.07 திகதியுடைய நிதி மற்றும் கொள்கை தயாரிக்கும் குழு அறிக்கைகளை முன்வைத்தல்

2. 2021.11.26 திகதியுடைய சுற்றுாடல் குழு அறிக்கையை முன்வைத்தல்

3. 2021.12.13 திகதியுடைய செயற்திட்ட குழு அறிக்கையை முன்வைத்தல்

4. 2021.12.21 திகதியுடைய விலைமனு கோரல் குழு அறிக்கையை முன்வைத்தல்

முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து குழு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**<u>கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்</u>**

அனைத்து குழு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
**(7) வருமான செலவு அறிக்கையை முன்வைத்தல்** - 2021 நொவம்பர் மாத வருமான செலவு அறிக்கை மற்றும் வருமான வளர்ச்சி அறிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டது

**உடபலாத பிரதேச சபை**
**வருமான செலவு அறிக்கை 2021 நொவம்பர்**

| | வருமானம் | | | | වියදම් | |
|---|---|---|---|---|---|---|
| **10** | <u>வரிப்பணம் மற்றும் குத்தகை</u> | | | 1 | சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 4,515,145.93 |
| I | வரிப்பணம் மற்றும் குத்தகை | 96,739.07 | | | | |
| II | நிலவரி | 12,300.50 | | 2 | போக்குவரத்து செலவு | 75,189.00 |
| III | நீர்க்கட்டணம் | 99,585.50 | | | | |
| IV | வியாபார வரி | 36,950.00 | 245,575.07 | 3 | வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 287,682.00 |
| **20** | <u>வாடகை</u> | | | | | |
| I | வீட்டு வாடகை | 3,875.00 | | 4 | நிலையான சொத்துக்கள் பழுதுபார்தல் மற்றும் பராமரித்தல் | 47,513.00 |
| II | வியாபார உரிமையை குத்தகைக்கு விடல் | 345,612.43 | | | | |
| III | பொது மலசலகூடம் | - | | | | |
| iv | குத்தகை பணம் | - | | | | |
| v | வாடகைக்கு விடல் | | 349,487.43 | | | |
| **30** | <u>அனுமதிப்பத்திர கட்டணம்</u> | | | | | |
| I | வியாபார அனுமதிப்பத்திரம் | 152,998.00 | | 5 | போக்குவரத்து தொடர்பு மற்றும் தேவையான சேவைகள் | 318,954.50 |
| II | வியாபார அனுமதிப்பத்திரம் முச்சக்கரவண்டி | 16,800.00 | 169,798.00 | | | |
| **40** | <u>சேவைகளுக்கான கட்டணம்</u> | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| I | பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் பரிசீலனை கட்டணங்கள் | 144,827.58 | | 6 | வட்டி கொடுப்பனவுகள் இலாப்தொகைள் மற்றும் உதவித்தொகைகள் | 8,378.58 |
| II | அறவிடக்கூடிய கட்டணங்கள் | 215,969.42 | 360,797.00 | | | |
| **50** | பிடியாணை கட்டணம் மற்றும் தண்டப்பணம் | | | 7 | நன்கொடைகள் மற்றும் உதவித்தெகைள் நன்கொடைகள் | 160,314.80 |
| I | தண்டப்பணம் | 10,029.94 | 16,735.66 | | | |
| 2 | பிடியாணை கட்டணங்கள் | 6,705.72 | | | | |
| **60** | வேறு வருமானங்கள் | | | | | |
| I | வட்டி | | | 8 | ஓய்வூதிய கொடுப்பனவு உழியர் சேமலாப நிதி | - |
| II | விற்பனைகள் | 357,449.00 | | | | |
| III | முத்திரை கட்டணங்கள் | 9,531,790.00 | | | | |
| IV | தொழிலாளர் கடன் வட்டி | 51,981.28 | 9,941,220.28 | | | |
| **70** | வேறு நன்கொடைகள் | | | 9 | நிலையான செலவு | 2,770,551.82 |
| I | நிர்வாக மீள்நிரப்பல உதவி | 3,988,931.37 | | | | |
| II | நன்கொடைகள் | | 3,988,931.37 | | | |
| **80** | <u>மூலதன பெறுவனவுகள</u> | | | | முற்பண கொடுப்பனவுகள் | 132,932.00 |
| I | மூலதன நன்கொடைகள | | - | | தொழிலாளர் கடன் | 126,319.00 |
| | தொழிலாளர் கடன | | 256,924.00 | | கடன்கெடுத்தோர் கொடுப்பனவுகள் | 1,060,265.36 |
| | வைப்புக்கள் | | 419,923.59 | | வைப்புக்கள் | 333,983.78 |
| | செயற்திட்ட கடன் பெறுவனவுகள் | | | | மேலதிகம் | 5,965,894.63 |
| | முற்பண கொடுப்பனவுகள் | | 53,732.00 | | | |
| | | | **15,803,124.40** | | | **15,803,124.40** |

<u>**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**</u>

2021 நொவம்பர் மாதம் வருமான செலவு அறிக்கை மற்றும் வருமான வளர்ச்சி அறிக்கை என்பவற்றை ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என பிரேரிக்கின்றேன்.

கௌரவ.சாந்த நவரட்ண - உறுப்பினர்

2021 நொவம்பர் மாதம் வருமான அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது அதற்கமைய மொத்த வருமானம் ரூ.15,803,124.40 எனவும் இதில் விசேடமாக இதுவரை வருமானம் வளர்ச்சியடைய காரணமாக இருப்பது ரூ.9,531,790.00 தொகை முத்திரை கட்டணமாக பெறப்பட்டுள்ளதால் ஆகும். மேலும் நிர்வாக மீள்நிரம்பலாக ரூ.3,988,931.37 என்பவற்றுடன் வேறு நாட்களைப் போல் வழமையான வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த மாதங்களில் பேசியது போல முத்திரை கட்டணம் மற்றும் நிர்வாக மீள்நிரம்பல் என்வற்றை குறைத்த பின் மொத்த வருமானம் கிடைக்கப் பெறப்பட்டுள்ள முறை விளங்குகின்றது. செலவுகளை பார்க்கும் போது நிலையான சொத்துக்களாக ரூ.47513.00 தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் முற்பண கொடுப்பனவுகளாக ரூ.132,932.00 தொகையும் கடன்கொடுத்தோர் கொடுப்பனவாக ரூ.1,060,265.36 தொகையும் என அம்மாதத்திற்கும் 37 இலட்சத்தை விட தொகை நிதி கொடுப்பனவாக ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அம்மாதத்தில் மேலதிகமாக ரூ.5,965,894.63 தொகை காட்டப்படுவதாகவும் வருமான செலவு ஆவணத்தின்படி கணக்குகள் தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைவதாகவும், எனினும் முத்திரை கட்டணம் மற்றும் நிர்வாக மீள்நிரம்பல் காரணமாக அவ்வாறு நடந்துள்ளதாகவும் தெரிவித்து, 2021 நொவம்பர் மாதம் வருமான செலவு அறிக்கை மற்றும் வருமான வளர்ச்சி என்பவற்றை ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என தெரிவித்தார்.

கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்

கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்
இன்றைய தினம் பொதுச்சபைக்கு வருகை தராத கௌரவ உறுப்பினர்களின் விடுமுறைகளை அனுமதிக்காக பொதுச்சபைக்கு முன்வைத்தார்.

கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்
இன்றைய தினம் மாதாந்த பொதுச்சபைக்கு சமூகமளிக்காத அனைத்து உறுப்பினர்களினதும் விடுமுறைகளை அனுமதிப்பது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்

கௌரவ.மொஹமட் முராட் - உறுப்பினர்
இன்றைய தினம் மாதாந்த பொதுச்சபைக்கு சமூகமளிக்காத அனைத்து உறுப்பினர்களினதும் விடுமுறைகளை அனுமதிப்பது பொருத்தமாகும் என நான் ஆமோதிக்கின்றேன்.

கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்

(8) வேறு

கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்
கௌரவ ஐயந்த கீர்த்திசிங்க உறுப்பினரின் பெரியப்பா இறந்துவிட்டார் எனவும் நான் வைத்தியச்சாலைக்கு சென்ற வேளையில் இன்றைய தினம் பி.ப 14.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெறுவதாக தெரிவித்தாகவும் குறிப்பிட்டு அதற்காக பங்குபற்றுமாறு கௌரவ உறுப்பினர்களிடத்தில் கேட்டுக் கொண்டார்.

கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்
பிறக்கும் புத்தாண்டு கௌரவ தலைவர், கௌரவ உப தலைவர், உட்பட உறுப்பினர் குழுவிற்கும், செயலாளர் உட்பட அலுவலக குழாமிற்கும் இனிய புத்தாண்டாக அமையட்டும் என வாழ்த்துக் கூறினார்.

(9) எதிர்வரும் பொதுச்சபை தினத்தை தீர்மானித்தல்

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
காணப்படும் நிலமைக்கமைய எதிர்வரும் பொதுச்சபை தினத்தை தீர்மானித்து அறிவிப்பதாக தெரிவித்தார்.

(10) பொதுச்சபையை முடிவுறுத்தல்

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
இன்றைய தினம் அப்படியானால் 2021ஆம் வருடத்தின் கடைசி பொதுச்சபை கூட்டத்திற்காக பங்குபற்றிய கௌரவ உப தலைவர் உட்பட உறுப்பினர் குழுவிற்கும் செயலாளர் உட்பட அலுவலக குழாமிற்கும் நன்றி தெரிவிப்பதோடு சிற்சில விடயங்களுக்கு நாம் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டாலும், நாம் சபைக்கு வெளியில் சகோதரத்துவத்துடன் நடவடிக்கை மேற்கொள்வதாகவும், 3 ½ வருட காலம் கடந்துள்ளதாகவும் தெரிவித்து, பிளக்கப்போகும் 2022ஆம் ஆண்டு அனைவருக்கும் இனிய புத்தாண்டாக அமையட்டும் என பிரார்த்திப்பதோடு எம்மால் செய்ய முடியாத விடயங்கள் தொடர்பாக 2022ஆம் ஆண்டில் மிகவும் சிறப்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு கௌரவ உறுப்பினர் குழுவிற்கும் செயலாளர் உட்பட அலுவலக குழாமிற்கும் ஆசிகள் கிடைக்கட்டும் என தெரிவித்து அனைவருக்கும் கடவுளின் ஆசி வேண்டி பி.ப 12.30 மணியளவில் சபையின் நடவடிக்கைகளை நிறைவு
செய்தார்.

செயலாளர்
உடபலாத பிரதேச சபை

தலைவர்
உடபலாத பிரதேச சபை